123

# பாரதியாரின் கற்பனையில் பாரததேசம்

முனைவர் ப. ரேவதி
இணைஆய்வறிஞர்
சுவாமி விவேகானந்தர் உயராய்வு மற்றும் கல்வி மையம்
பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்
மின்னஞ்சல் revatamil08@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

இந்தியா விடுதலைக்காகத் தவம் கிடந்த தருணங்களில் பாரதிக்கும் பாரததேசத்துக்குமானத் தொடர்பு தாய்க்கும் சேய்க்குமான தொடர்பு. அடிமைப்பட்டுக் கிடக்கும் தாயை மீட்கப் போராடும் மகனுக்குரிய தவிப்பு பாரதியின் பாக்களில் பெரும்பாலும் இழையோடும். பாரதமாதா, எங்கள் தாய், பாரத தேவி எனத் தன் படைப்புகளில் பெரும்பகுதியைப் பாரதத்திற்காகக் கட்டமைத்தான் பாரதி. பாரத மாதாவிற்காகத் திருப்பள்ளி எழுச்சி பாடினான். பாரத மாதாவிற்குத் தன் நவரத்தினப் பாக்களால் பாமாலை சூட்டினான். பாஞ்சாலி சபத மாகாவியத்திலே மண்ணை வைத்திழந்த பாரத தருமர்களுக்குச் சொற்களால் சூடு வைத்தான். பாரதிக்குப் பாரத நாடு என்பது தான் வாழும் வீடாக இருந்தது. பாரத நாட்டு மக்களே உறவுகளாகத் திகழ்ந்தனர். பரந்த மனப்பான்மையுடன் பாரத தேசத்தைக் கண்ட பாரதியின் அகவிழி நோக்கு குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது.

**முன்னுரை**

பாரதி 1882-1921 காலகட்டத்தில் வாழ்ந்து மறைந்து விட்டான். 39 அகவை மட்டுமே வாழ்ந்த பாரதி விடுதலை இந்தியாவை விண்ணிலிருந்துதான் கண்டு களித்தான். பாரத நாட்டின் மீது ஆழிக் காதலுற்று அவன் பாடிக் களித்ததெல்லாம் தன் தாய்நாடு குறித்த அவன் கனாக்களாகக் காத்திருக்கின்றன. பாரத நாடு குறித்த பாரதியின் கற்பனைகள் இக்கட்டுரையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

**1. பாரதத்திற்கு ஆனந்தப் பள்ளு**

பாரதி ஒரு தீர்க்கதரிசி. காலக் கணியன். நம்பிக்கை ஆழி. பாரதம் அடிமையுற்று புழுங்கிக் கொண்டிருந்த காலத்தில் விடுதலைக் காற்றுக்கான நம்பிக்கை விதைகளை ஊன்றினார்.

**“ஆடுவோமே - பள்ளுப் பாடுவோமே**
**ஆனந்தச் சுதந்திரம் அடைந்துவிட் டோமென்று ..”**

பாரதி ஆடிப் பாடிக் களிக்கின்றார்.

**“எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு - நாம்**
**எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு**
**சங்கு கொண்டே வெற்றி ஊது வோமே - இதைத்**
**தரணிக்கெல் லாமெடுத்து ஓதுவோமே”**

எனுமாறு விடுதலையையும், சமத்துவத்தையும் சரிநிகரெனக் காணும் பாரதியின் ஆனந்தப் பள்ளு இந்தியாவுக்கு புதிய ஊக்கசக்தியாக அமைந்தது. விடுதலை இந்தியாவைக் காணாது பாரதியின் பூவுடல் மறைந்திருந்தாலும் பார் மீது சாகாதிருக்கும் அவரது புகழுடல் விடுதலை இந்தியாவைக் கண்டு களிக்கின்றது.

**2. உலக அரங்கில் பாரதம்**

பாரத நாட்டின் எல்லையைக் கடக்காத பாரதிக்கு நாட்டின் மீதான மதிப்பு எல்யைற்றதாக இருந்தது. உலக நாடுகளுக்கெல்லாம் பாரத நாடு திலகம் என்பதை பாரதி உறுதிபட நம்பினார்.

**“பாரதநாடு பார்க்கெல்லாம் திலகம்**
**நீரதன் புதல்வர்இ இந் நினைவகற்றாதீர்!”**

எனும் அடிகள் பாரதநாட்டின் மீது பாரதிக்கிருந்த ஆழிக்காதலையும் அதனையும் கடந்த அளப்பரிய நம்பிக்கையையும் காட்டுகின்றது. பாரதநாட்டின் பெயருக்குக் கூட சக்தியுண்டென நம்பிய நாட்டுப் பற்றாளன் பாரதி. பாரத நாட்டைக் குறித்த நல்மதிப்பும் பாரதநாட்டின் குடிமக்கள் நாங்கள் எனும் இறுமாப்பும் உலக அரங்கில் இன்றியமையாத இடத்தை இந்திய நாட்டிற்கு நல்கும் எனும் நேர்முகச் சிந்தனை பாரதியிடம் மேலோங்கிக் காணப்பட்டது. உலக அரங்கில் பாரதநாட்டிற்கு உயரிய இடம் என்பது பாரதிக்குத் தன் நாட்டின் மீதான நம்பிக்கையின் வெளிப்பாடாகும்.

**3. அறியாமை இருளற்ற பாரதம்**

பாரதி நேர்மறைச் சிந்தனையாளன். வறுமையிலும் வளமான எழுத்துக்களைப் படைத்தவன். தனக்கு ஊண் இல்லாத காலத்திலும் உணர்ச்சியுடன் வாழ்ந்தவன். பாரதத்தின் நிலைகண்டு அவன் வருந்தியது வலிமிகு அவனது வரிகளில் ஒலிக்கின்றது. நெஞ்சு பொறுக்காது நிலைகெட்ட மனிதர்களைத் தன் சொற்சாட்டையால் சுழற்றித் தூக்கி எறிந்தான் பாரதி. தான் பழகிய ரௌத்ரத்தை தன் படைப்புகளில் தெளித்தான். தன் சமகாலச் சமூக மக்களின் அறியாமையை ஏற்கவும் முடியாமல் எளிதாகக் கடக்கவும் முடியாமல் நின்ற பாரதியின் தவிப்பு,

**“நெஞ்சு பொறுக்கு திலையே! - இந்த**
**நிலை கெட்ட மனிதரை நினைந்துவிட்டால்**
**அஞ்சி யஞ்சிச் சாவார் - இவர்**
**அஞ்சாத பொருளில்லை அவனியிலே!”**

எனும் பாடலில் வெளிப்படுகின்றது. அதனின்று அடிமையுணர்வையும் அறியாமையையும் பாரதி அறவே வெறுத்தான் என்பது புலனாகின்றது.

**4. போகின்ற பாரதமும் வருகின்ற பாரதமும்**

பாரதி குறைகளற்ற நிறைகள் நிரம்பி வழியும் பாரதத்தைப் படைக்க விரும்பினான். இருநூறு ஆண்டுகள் உணர்வற்று உயிர்ப்பற்று உறங்கிக் கிடந்த பாரத மக்களின் உயிரணுக்களைத் தன் உரம்மிகும் பாக்களால் தூண்டினான். உடலாலும் உணர்வாலும் முடங்கியும் சோம்பியும் கிடக்கும் மக்கள் பாரதத்தின் முன்னேற்றத்திற்கான முட்டுக் கட்டைகள் என்பதை பாரதி அன்றே உணர்ந்திருந்தான். அத்தகு களைகளைப் போகின்ற பாரதமெனச் சபித்து விரட்டினான்.

**“வலிமை யற்ற தோளினாய் போ போ போ**
**மார்பி லேஒ டுங்கினாய் போ போ போ”**

எனும் கவிதை பாரதி விரும்பாத சமூகக் களைகளை இனங்காண உதவுகின்றது. தன் பாரத நாட்டில் எண்ணம், சொல், செயல் என எல்லாவற்றிலும் நல்லவை நிரம்ப வேண்டும் என்பதே பாரதியின் அவா ஆகும். இலக்குகளுடனான பாரதம் (Ideal India) நோக்கிய பாரதியின் கனவு வருகின்ற பாரதத்தை வரவேற்பதில் வெளிப்படுகின்றது.

**“ஒளிப டைத்த கண்ணினாய் வா வா வா**

**உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா”**

எனும் பாடலில் பாரதத்தில் குறிக்கோள் சமுதாயத்தைப் படைக்க விரும்பிய பாரதியின் ஆர்வம் வெளிப்படுகின்றது.

**5. ஒப்பில்லாத பாரதம்**

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டுமென்பது பாரதி விரும்பிய சமூக நீதியாகும். பாரத நாட்டின் வளங்கள் அனைத்தையும் அன்றிருந்த முப்பது கோடி மக்களுக்கும் பொது உடைமையாகப் பாரதி பங்கு வைத்தான். முப்பது கோடி மக்களையும் ஒருங்கிணைத்துச் சங்கம் அமைத்தான். சாதி, மத, இன, மொழிப் பாகுபாடுகளற்று நாடு தழுவிய கூட்டமைப்பைச் சிந்தித்த முதல் சிந்தனையாளன் பாரதியாகத்தான் இருக்கக்கூடும். உலகம் வியக்கும் வண்ணம் ஒப்பில்லாத சமுதாயம் படைக்க விரும்பிய பாரதியின் சிந்தனை உலகத்துக்கொரு புதுமை என்பதனை,

**“முப்பது கோடி ஜனங்களின் சங்கம்**

**முழுமைக்கும் பொது உடைமை**

**ஒப்பில் லாத சமுதாயம்**

**உலகத் துக்கொரு புதுமை”**

எனும் கவிதை உணர்த்துகின்றது.

**6. பொதுவுடைமை பாரதம்**

பாரத நாட்டுக்கானப் பொதுவுடைமையை முன்னெடுத்தவன் பாரதி. எல்லோரையும் ஓர் குலமாவும், ஓர் நிறையாகவும் பார்க்கின்ற பொதுமைப் பார்வையைப் பாரதி முன்னெடுக்கின்றார். பாரத நாட்டுக் குடிமக்கள் அனைவரையும் முடி சூட்டி மன்னர்களாக்கியவன் பாரதி.

**'எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓரினம்**

**எல்லாரும் இந்திய மக்கள்,**

**எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை**

**எல்லாரும் இந்நாட்டு மன்னர்"**

எனும் பா தொடர்ந்து எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்பதை அழுத்திச் சொல்கின்றது. அந்த அழுத்தம்தான் பாரதியின் பொதுவுடைமைச் சிந்தனைக்கான ஆணிவேர்.

**7. ஒற்றுமைமிகு பாரதம்**

வேற்றுமைகள் நிறைந்த பாரதத்தின் வெற்றி மந்திரம் அதன் ஒற்றுமையே என்பதைப் பாரதி அறிந்திருந்தார். வாழ்வோ தாழ்வோ அதனை ஒற்றுமையோடு எதிர்கொள்ளும் உணர்வைப் பாரதி பரிந்துரைக்கின்றார். வாணிக நோக்கில் வந்தவர்களின் பிரித்தாளுகையை இந்தியர்கள் ஒற்றுமையுடன் எதிர் கொண்டிருந்தால் இரு நூற்றாண்டுகள் அடிமைப்பட்டுக் கிடந்திருக்கும் அவலம் நேர்ந்திருக்காது. மீண்டும் அப்பிழை பாரத வரலாற்றில் நிகழாதிருக்க பாரதி ஒற்றுமையை மந்திரமெனத் தருகின்றார்.

**“ஒன்று பட்டால் உண்டு வாழ்வே - நம்மில்**

**ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே”**

எனும் கவிதை வாழ்வோ, தாழ்வோ அதனை பாரத மக்கள் பொதுவெனப் பொறுப்பேற்றுச் சமன் செய்கின்ற ஒற்றுமைமிகு பாரதத்தைக் காட்சிப்படுத்துகின்றார்.

**8. பசியற்ற பாரதம்**

உணவு என்பது வெறும் வயிற்றுக்கான உட்பொருளன்று. ஒவ்வொரு உயிரியின் அடிப்படைத் தேவை. அதனைப் பெற்றிடும் வாய்ப்பைச் சமூகம் அனைவருக்கும் வழங்கிட வேண்டும். இந்தியா இன்றும் தன்னிறைவான உணவு பெற்ற நாடாக இல்லை. பசியால் ஊரின் கடைக்கோடியில் ஏதோ ஒரு உயிர் பலியாகிக் கொண்டுதானிருக்கின்றது. பசியைப் பிணி என்கின்றது மணிமேகலை. பாரதிக்கும் பசிக்கொடுமையின் வலி தெரிந்திருந்தது. பாரதியின் வாழ்க்கை வரலாறு அவன் பசித்திருந்த வேளைகளைப் பதிவு செய்கின்றது. ஆனால் அவன் படைப்புகளில் அதற்கானச் சுவடுகளைக் கூடக் காணமுடியவில்லை. தன் வறுமையை வெளிக்காட்டாத பாரதி பசியின் வலியை வெளிப்படுத்துகின்றார். வறுமையற்ற பாரதம் படைத்திட புது விதியொன்றை செய்யப் பணிக்கின்றார்.

**"இனியொரு விதிசெய் வோம் - அதை**
**எந்த நாளும் காப்போம்!**
**தனியொருவனுக் குணவிலை யெனில்**
**ஜகத்தினை அழித்திடுவோம்"**

எனும் பாரதியின் கவிதை வறுமையுற்ற பாரதத்திற்கான வலி களையக் புது விதியைத் தேடுகின்றது. உணவுக்காக உலகை அழிக்கத் துணியும் அறச்சீற்றம் பசியற்ற பாரதத்திற்கான வெளிப்பாடாகும். இயலாமையால் வறுமையுற்றவர்களின் பசியை இருப்பவர்கள் உணர்ந்தால் பசிப்பிணியை ஒழிக்க இயலும். உணவைப் பகிர்தலும், உணவுக்கான உழைப்பைத் தேடுதலும் மட்டுமே வறுமையைப் போக்கும்.

**"மனித ருணவை மனிதர் பறிக்கும்**
**வழக்கம் இனியுண்டோ?**
**மனிதர் நோக மனிதர் பார்க்கும்**
**வாழ்க்கை இனியுண்டோ?"**

எனும் பா எழுப்பும் வினா, பகிர்தலுடன் கூடிய பசியற்ற பாரதம் நோக்கி மனிதர்களை நகர்த்துகின்றது. பாரதி மானுடர்களுக்கு மட்டுமன்றி உலக உயிர்களின் பசி குறித்தும் உணர்ந்திருந்தான். வீட்டிலிருந்த ஒரு படி அரிசியையும் சிட்டுக் குருவிகளுக்கு இறைத்துச் 'சிட்டுக் குருவிகளுக்கும் வயிறு உண்டு தானே செல்லம்மா ... நாம் உண்டிருந்தால் நம் நால்வர் வயிற்றுக்குத்தான். ஆனால் இங்கே பல குருவிகள் பசியாறுகின்றன பார்' எனப் பாரதி வாதிடுவது பல்லுயிர் ஓம்புதலைப் பதிவு செய்கின்றது.

**9. சாதிகளற்ற பாரதம்**

பாரத நாட்டின் வளர்ச்சிக்கானத் தடைக் கற்களுள் சாதியம் முக்கியமான பேசுபொருளாகும். நால்வருண முறைப்படி பகுக்கப்பட்ட சாதியம் பிற்காலத்தில் ஏற்றத் தாழ்வுகளுக்குக் காரணியாக அமைந்தது. அத்தகு சாதியப் பாகுபாடுகளைப் பாரதி முற்றிலும் தவிர்க்கிறார்.

**"ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்**
**ஜன்மம்இத் தேசத்தில் எய்தின ராயின்**
**வேதிய ராயினும் ஒன்றே - அன்றி**
**வேறு குலத்தின ராயினும் ஒன்றே"**

எனச் சாதியத்திற்கு எதிராகக் குரல் கொடுக்கின்றார். பிறப்பால் உயர்வு தாழ்வு நோக்குகின்ற இழிசெயலை பாரதி கண்டிக்கின்றார். எத்தகைய ஒடுக்கு முறைகளுமற்ற உயர்சாதியெனக் கருதப்படும் வகுப்பில் பிறந்த

போதும் அதன் மதிப்புகளைத் துச்சமெனத் தூக்கி எறிந்து ஒடுக்கப்பட்ட மக்களின் உள்ளக் குமுறல்களை பாரதி யோசித்தார். சிந்தையால் மட்டுமன்றி செயலாலும் பாரதி சாதியத்தைச் சாடினார். உயர் சாதியினர் தங்களுக்குரிய மதிப்பு எனக் கருதிய பூணூலை ஒடுக்கப்பட்ட மாணவன் ரா.கனகலிங்கத்திற்கு அணிவித்து சாதியத்தைக் கட்டுடைத்தார். என் குருநாதர் பாரதியார் எனும் கனகலிங்கத்தின் நூல் சாதியம் மீது பாரதிக்கிருந்த கசப்பைக் காட்டுகின்றது.

**10. கடலாளும் பாரதம்**

பாரதி கடற்பயணம் மேற்கொள்ளாதவன். ஆனால் கடல் கடந்து பாரதத்தின் வேர்களைப் பரப்பச் சிந்தித்தவன். பாரதத்தின் எல்லையாகக் கடல் அமைந்திருப்பது அதன் பலம் என்பதை பாரதி அறிந்திருந்தான். கடல் வழி வாணிபமும்இ அயல் நாட்டுத் தொடர்பும் பாரதத்திற்கு தகுஉயர்வளிக்கும் என்பதனை அவன் படைப்புகள் உணர்த்துகின்றன. வெள்ளிப் பனிமலையின் மீதுலவி மேலைக் கடல் முழுதும் கப்பல் விடும் கலையை பாரதி பாடுகின்றான்.

**“முத்துக் குளிப்பதொரு தென்கடலிலே!**
**மொய்த்து வணிகர் பல நாட்டினர் வந்தே**
**நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து**
**நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே"**

எனும் கவிதையில் பல நாடுகளிகளினின்றும் வாணிகர் பாரத நாட்டின் மேற்குக் கரையில் இந்தியாவுடன் வணிகம் புரிய வேண்டிக் காத்து நிற்பர் எனும் கருத்து வெளிப்படுகின்றது. உலகளாவிய கடல் வாணிகத்தில் நம் பாரத நாடு சிறந்து விளங்க வேண்டுமென்பது பாரதியின் கனாவாகும்.

**11. தொழில்துறைகள்மிகு பாரதம்**

ஒரு நாட்டின் பொருளாதாரத்தை அந்நாட்டின் தொழில் துறைகளே பெரும்பாலும் தீர்மானிக்கின்றன. பாரதி உற்பத்தித் தொழிற்சாலைகளை ஊக்குவிப்பவராகத் திகழ்கின்றார். ஆயுதம் செய்யவும், நல்ல காகிதம் செய்யவும், கொல்லர் உலை வளர்க்கவும், நல்ல ஊசிகள் செய்யவும் கூறுகின்றார். பெரிய தொழிற்சாலைகள் மட்டுமன்றி குறு தொழில்களுக்கும், குடிசைத் தொழில்களுக்கும் பாரதி விரும்பிய பாரதத்தில் வாய்ப்பளிக்கப்பட்டது.

**“குடைகள் செய் வோம்உழு படைகள்செய் வோம்**
**கோணிகள்செய் வோம் இரும்பாணிகள் செய்வோம்**
**நடையும் புறப்புமுணர் வண்டிகள்செய் வோம்**
**ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்"**

எனும் கவிதை தொழில்துறைகள்; வளரும் பாரதத்தைக் காட்சிப்படுத்துகின்றது. உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம் எனும் பாரதியின் கூற்று பன்னாட்டுப் பொருளாதாரத்திற்கான வாயிலைப் பாரதம் திறப்பதனை ஊக்குவிக்கின்றது.

பாரத நாட்டில் உள்ள உள்நாட்டுப் பொருட்களைப் பகிர்ந்து பயன்படுத்துதல் என்பதும் பாரதியின் கனவின் நீட்சியாகும். மாநிலங்களுக்கிடையேயான முரண்களைத் தகர்க்கவும் உள்நாட்டு வாணிகத்தை மேம்படுத்தவும் இப்பண்டமாற்று வாணிகம் துணைநிற்கும். மேலும் பணமற்றப் பரிவர்த்தனை எனும் வாணிக முறைக்கு மூலமாக பண்டமாற்று வாணிகம் அமைகின்றது.

**“கங்கை நதிப்புறத்துக் கோதுமைப்பண்டம்**

**காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளு வோம்**

**சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு**

**சேரத்துத் தந்நதங்கள் பரிசளிப்போம்"**

எனும் பாரதியின் கருத்து பண்டமாற்று வாணிகம் புரியும் பாரதத்தைக் காட்சிப்படுத்துகின்றது.

**12. தொழில்நுட்பமுடைய பாரதம்**

பாரதி பழமை விரும்பியன்று. புதுமைகளைக் கால மாற்றத்திற்கேற்ப வரவேற்றவன். பாரதி தன் படைப்புகளின் வழி தமிழில் மரபுக் கவிதைகளைக் கட்டுடைத்து புதுக்கவிதைகளுக்கு முகவரி அளித்தான். காவியக் கதைகள் போலன்றி ஒரு பக்கத்துள் வேடிக்கைக் கதைகள் படைத்தான். இதழியலில் எழுத்துக்களால் மட்டுமன்றி கேலிச் சித்திரங்களாலும் தகவல் பகிர்ந்தான். படைப்புகளில் புதுமை கண்ட பாரதி அறிவியலின் அரிய கண்டுபிடிப்புகளையும் தொழில்நுட்ப முன்னேற்றத்தையும் சமூகத்திலும் வரவேற்றான். உலகத்தையே உள்ளங்கைக்குள் சுருக்கிய அலைபேசிகளின் பயன்பாட்டைப் பாரதி அன்றே பாடிக் களித்தான்.

**"காசி நகர்ப்புலவர் பேசும்உரை தான்**

**காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்"**

எனும் பாரதியின் கவிதை வரிகள் தொழில்நுட்ப வசதிகளையும்இ தொழில்நுட்ப ஊடகங்களையும் வரவேற்ற பாரதியின் புத்தாக்கச் சிந்தனை வெளிப்படுகின்றது.

**13. பெண்மை போற்றிடும் பாரதம்**

பாரதியின் காலச்சூழலில் பெண்ணடிமைத்தனம் சமூகத்தில் இயல்பாகவே காணப்பட்டது. பாரதி இத்தகு இயல்பின் இழிவை உணர்ந்த போது தன்னை மாற்றிக் கொண்டார். ஆணுக்கு நிகரெனப் பெண்ணையும் மதிக்கும் பேராண்மை பூண்டார். பாலினப் பேதத்தினைத் தீர்த்திடப் பெண்ணிற்குப் புதிய இலக்கணம் படைத்தார்.

**"நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும்**

**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்**

**திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்**

**செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்"**

எனும் கவிதையில் பாரதி பெண்ணிற்கான இலக்கணம் படைக்கின்றார். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் பெண்ணின் நால்வகைக் குணங்களைக் கட்டுடைத்து புதுமைப் பெண்ணிற்கு அறிவொன்றையே அணிகலனாக்குகின்றார் பாரதி. பெண்மையைப் போற்றுகின்ற வையம் மட்டுமே தழைக்க இயலும் எனும் பாரதியின் கருத்து பெண்ணிற்கான வெளியைக் கட்டமைக்கின்றது.

**"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்**

**அறிவி லோங்கிஇவ் வையம் தழைக்குமாம்"**

எனும் கவிதையில் நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டும் எனும் அடிகள் பெண்ணடிமைச் சமூகத்தின் மீது பாரதிக்கிருந்த கோபத்தைக் காட்டுகின்றது. அறிவு கொண்ட மனித உயிர்களை அடிமையாக்க முயல்பவர்களைப் பித்தரென்று சாடுகின்றார். அடுக்களைக்குள் அடைபட்டுக் கிடந்த இறகொடிந்த பெண்ணிற்கு அறிவுச் சிறகுகளை அணிவித்து அழகு பார்த்தார் பாரதி. அடுக்களையின் புகை மண்டி

மூச்சடக்கிக் கிடந்த பெண்ணிற்கு விடுதலைக்காற்று தேவையெனக் கருதி பெண்கல்விக்காக விழிப்புணர்வூட்டினார்.

**14. கல்வியறிவு மிக்க பாரதம்**

பாரதி தன் அறிவுப் பார்வையால் உலகை அளந்தவர். கல்வி குறித்த தேசியக் கொள்கையை முதன்முதலில் சிந்தித்தவர் பாரதி. நாடு முழுமைக்குமான பொதுக்கல்வித் திட்டம் பாரதியின் கல்விக் கொள்கையின் அடிப்படையாகும். உலகெங்கும் பரவிச் சென்று அறிவைத் தேடி ஆய்வுகள் நிகழ்த்தல் வேண்டும் எனும் உலகளாவிய பார்வை பாரதிக்கிருந்தது. எட்டுத் திக்கும் சென்று கலைச் செல்வங்கள் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் எனும் தேடல் பாரதியிடம் மேலோங்கிக் காணப்பட்டது. தேசக் கல்விக்கு குடும்பக் கல்வியே வேர் எனுமாறு பாரதி கல்வியை சமூகத்தின் அடிப்படை அலகானக் குடும்பத்தினின்று தொடங்குகின்றார். அனைவருக்கும் ஆரம்பக் கல்வித் திட்டத்தின் தொடக்கப் புள்ளியாகப் பாரதியார், “உங்களுடைய கிராமத்தில் ஒரு பாடசாலை ஏற்படுத்துங்கள். அல்லது பெரிய கிராமமாக இருந்தால் இரண்டு மூன்று வீதிகளுக்கு ஒரு பள்ளிக்கூடம் வீதமாக எத்தனை பள்ளிக்கூடங்கள் ஸாத்யமோ அத்தனை ஸ்தாபனம் செய்யுங்கள்" எனும் கருத்தைப் பதிவிடுகின்றார்.

பன்மொழிப் பாவலராகத் திகழ்ந்த பாரதி யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும்; காணோம் எனத் தமிழுக்கு மகுடம் சூட்டுகின்றார். மொழிக் கல்வி குறித்தும் தாய்மொழி வழிக் கல்வி குறித்தும் எழும் முரண்களுக்குஇ

**“தமிழ் நாட்டில் தமிழ் மொழி தலைமை பெற்றுத் தழைத்திடுக"**

என முற்றுப் புள்ளி வைக்கின்றார். நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் மொழி பெயர்த்திட அறிவுறுத்துகின்றார்.

**15. மானுடம் போற்றும் பாரதம்**

காக்கை குருவியைத் தன் சாதியாகவும் நீள் கடலையும் மலையையும் தன் கூட்டமெனவும் கண்டவன் பாரதி. இவ்வுலகம் இனியது எனும் பார்வை பாரதிக்கு எப்போதும் உண்டு. குருவியுடனும் குயிலுடனும் பேசிக் களித்தான். உணர்வும் உயிரும் எல்லாவற்றுக்கும் ஒன்று தான் என மானுடம் கடந்த உயிர் நேயம் போற்றினார். மண்ணை நேசித்த பாரதி உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்தார். போர்க்களத்திலும் பூக்களை இரசிக்கும் பக்குவநிலையைப் பாரதி பெற்றிருந்தார். இவ்வுலம் இனியது எனும் வசனகவிதை மானுடத்துக்கான அறமாகும். வாழ்க்கையை எங்ஙனம் எதிர்கொள்வது எனும் வாழ்வியல் விழுமியமாகும்.

**முடிவுரை**

பாரதியார் தமிழகம் பெற்ற மகாகவி. பன்முக ஆளுமையால் பார் புகழும் படைப்புகளைத் தமிழிற்கு நல்கிய கவி வள்ளல். கேட்போரைத் தொற்றிக் கொள்ளும் நேர்முகச் சிந்தனையாளர். பாரத நாட்டைப் பார் புகழும் சிகரத்திற்குக் கொண்டு சென்றிடத் துடித்த சமூக ஞானி. பாரதியின் கனாக்களில் நனவாகாத பக்கங்களை நாளைய விடியல் திருத்தியமைக்க பாரதியருள் துணைநிற்கட்டும். பாரதியின் கற்பனையில் பாரதநாடு பெற்ற பரிமாணங்களை விவரிக்குமாறு இக்கட்டுரை அமையலாயிற்று.

**துணைநின்றவை**

1.பாரதி கவிதைகள் (மூலமும் தெளிவுரையும்), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-2019

2. பாரதியார் கட்டுரைகள், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 2019